## அப்போலோ மருத்துவமனையில்

# அவசர சிகிச்சை பிரிவில் அதிநவீன தொழில்நுட்ப கேத் லேப்



▶ சென்னை தேனாம்பேட்டை அப்போலோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, அவசர சிகிச்சை பிரிவில் அதிநவீன தொழில்நுட்ப கேத் லேப்-பை அமைச்சர் சாமிநாதன் நேற்று திறந்து வைத்தார்.

**சென்னை, ஆக.14:** தேனாம்பேட்டையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அதிநவீன தொழில்நுட்ப கேத் லேப் தொடங்கப்பட்டுள்ளது.

தேனாம்பேட்டையில் உள்ள அப்போலோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் உள்கட்டமைப்பு மேம்படுத்த உயர் தெளிவுத்திறன் கொண்ட 3டி இமேஜிங், மேம்பட்ட ஸ்டென்ட் மோஷன் காட்சிப்படுத்தல், விரிவான பாதுகாப்பு அம்சங்களுடனான நரம்பு பாதுகாப்பு மற்றும் குறைந்த அளவிலான கதிர்வீச்சு தொழில்நுட்பத்தை அடங்கிய கேத் லேப் தொடங்கப்பட்டுள்ளது. இதை அமைச்சர் சுவாமிநாதன் திறந்து வைத்தார். இந்த கேத் லேப் என்பது சிறப்பு சிகிச்சைகளுக்கான ஒரு பிரத்யேக அறையாகும். இங்கு மிகவும் சிக்கலான, உயிர்காக்கும் மருத்துவ நடைமுறைகளை, உடலில் குறிப்பிட்ட பகுதியை கீறி மேற்கொள்ளும் திறந்த அறுவை சிகிச்சையின் தேவையில்லாமல் மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இதயம், நரம்பு மற்றும் புற்றுநோய் தொடர்பான சிகிச்சைகளில் மருத்துவர்கள் மிகத் துரிதமாகவும், மிகத் துல்லியமாகவும், நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். அதிநவீன கேத் லேப் தொழில்நுட்பத்திலான இந்த அவசர சிகிச்சைப் பிரிவை தமிழ் வளர்ச்சி, தகவல் மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் சாமிநாதன் திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக அப்போலோ மருத்துவமனையின் புற்றுநோய் அண்ட் இன்டர்நேஷனல் பிரிவின் இயக்குநர் ஹர்ஷத் ரெட்டி கூறியதாவது:மிகவும் மேம்பட்ட கேத் லேப் தொடங்கப்பட்டிருப்பது, அதிநவீன தொழில்நுட்பம் அடிப்படையிலான, மிகத் துல்லியமான மருத்துவ பராமரிப்பை முன்னெடுக்கும் அப்போலோவின் பயணத்தில் மற்றொரு மைல்கல். இந்த நவீன வசதி மருத்துவர்களுக்கு மேம்பட்ட திறன்களை வழங்குகிறது. அவர்கள் சிறப்பான முறையில் நோய்களை கண்டறிய முடியும். அவசர நிலைகளில் மிக வேகமாக செயல்பட முடியும். மேலும் இதயவியல், நரம்பியல் மற்றும் புற்றுநோயியல் ஆகிய பிரிவுகளில் நோயாளிகளுக்கு பாதுகாப்புடனும், துல்லியத்துடனும் சிகிச்சை அளிக்க முடியும். இந்த மேம்பட்ட கேத் லேப், நோயாளிகள் மிக துரிதமாக குணமடைவதிலும், குறைந்தபட்ச ஊடுருவும் அறுவை சிகிச்சைகளைப் பெறுவதிலும், சிகிச்சையின் பலனாக நேர்மறை பலன்களைப் பெறுவதிலும் பெரும் பங்கு வகிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாடு ஆளுநர்

# ஆர்.என்.ரவியின் தேநீர் விருந்தை அரசியல் கட்சிகள் புறக்கணிப்பு

**சென்னை, ஆக.14:** சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி தேநீர் விருந்துக்கு வருமாறு அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். ஆனால், திமுக கூட்டணி கட்சிகள் இதை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.

**செல்வப்பெருந்தகை (மாநில காங்கிரஸ் தலைவர்):** தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக செயல்படும் ஆளுநரை கண்டித்தும், கலைஞர் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் உருவாக்குவதற்கான சட்ட மசோதாவை வேண்டுமென்றே காலம் தாழ்த்தி குடியரசு தலைவருக்கு ஆளுநர் அனுப்பியுள்ளதைக் கண்டித்தும், சுதந்திர தினத்தன்று அவர் அளிக்கும் தேநீர் விருந்தை தமிழ்நாடு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கின்றோம்.

**சண்முகம் (மார்க்சிஸ்ட் மாநில செயலாளர்):** ஆளுநர் ஆர்.என்.ரவி கூட்டாட்சி தத்துவத்திற்கு விரோதமாகவும், தமிழக நலனுக்கு எதிராகவும், அரசமைப்புச் சட்டத்திற்கு முரணாகவும் தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறார். உச்ச நீதிமன்றம் ஆளுநர்களின் அதிகார வரம்பு குறித்து கூறிய பிறகும், திருந்த மறுக்கிறார். கலைஞர் பல்கலைக்கழக மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்காமல் அதனை

குடியரசு தலைவருக்கு அனுப்பி உச்ச நீதிமன்றம் சொன்னாலும் நான் கேட்க மாட்டேன் என்று செயல்பட்டு வருகிறார். ஆளுநர் ஆர்.என்.ரவியின் அணுகுமுறையை கண்டித்து எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சுதந்திர தினத்தன்று அவர் அளிக்கும் தேநீர் விருந்தை புறக்கணிக்கிறோம்.

**முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர்):** தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் உதவ வேண்டிய ஆளுநர், அதற்கு தக்கபடி ஒரு நாளும் நடந்து கொள்ளவில்லை. கலைஞர் பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பான மசோதாவை கடைசி நாள் வரை கிடப்பில் போட்டு வைத்து, இறுதியாக குடியரசு தலைவர் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளார். ஆளுநர் அத்துமீறல் தொடரும் நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஆளுநரின் தேநீர் விருந்தில் பங்கேற்காது, புறக்கணிக்கிறது.

**திருமாவளவன் (விசிக தலைவர்):** வழக்கம்போல ஆளுநர் சுதந்திர நாள் விழா தேநீர் விருந்தில் பங்கேற்கும்படி விசிகவுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அதற்காக அவருக்கு எமது நன்றி. அதே வேளையில் வழக்கம்போல விழாவில் விசிக பங்கேற்காது.

**ஜவாஹிருல்லா (மமக தலைவர்):** ஆளுநர் ஆர்.என்.ரவி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுடன் தேவையற்ற மோதல்களை அவர் உருவாக்கி வருகிறார். மாநில அரசின் அதிகாரத்தையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஜனநாயக செயல்பாடுகளையும் தொடர்ச்சியாக சீர்குலைக்கும் வகையில் ஆளுநர் ரவி செயல்பட்டு வருவதால் அவரது தேநீர் விருந்தை மனிதநேய மக்கள் கட்சி புறக்கணிக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறி உள்ளனர்.

## இரண்டாம் கட்டமாக

# 17 தொகுதிகளை கொண்ட அம்பேத்கர் பற்றிய நூல்

### அமைச்சர் சாமிநாதன் வெளியிட்டார்

**சென்னை, ஆக. 14:** இரண்டாம் கட்டமாக 17 தொகுதிகளை கொண்ட அம்பேத்கர் பற்றிய நூலை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வெளியிட்டார்.

அம்பேத்கரின் அனைத்து படைப்புகளும் இன்றைய தமிழ் இளைஞர்கள் எளிமையாக வாசிக்கும் வகையில் புலவர் செந்தலை ந.கவுதமன், பேராசிரியர் வீ.அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் மு.வளர்மதி, கல்லூரி கல்வி இயக்ககத்தின் முன்னாள் துணை இயக்குநர் அ.மதிவாணன் ஆகியோரின் நெறியாளுகையில் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் பிறமொழி கலப்பினை அகற்றி மொழிபெயர்க்கப்பட்டது. தமிழ் வளர்ச்சி துறை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்துடன் இணைந்து மக்கள் பதிப்பாக அணியம் செய்யப்பட்ட முதல் 10 தொகுதிகள் முதல்வர் மு.க.ஸ்டாலினால் 13.1.2025 அன்று வெளியிடப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, தற்போது இரண்டாம் கட்டமாக மொழிபெயர்க்கப்பட்டு அணியம் செய்யப்பட்டுள்ள தீண்டாமை – 2 தொகுதிகள்; காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்கு செய்தது என்ன – 4 தொகுதிகள்; இந்து மதம், மார்க்சியம், மத மாற்றம் – 4 தொகுதிகள்; புத்தர் – அவரது தம்மம் – 3 தொகுதிகள்; பாகிஸ்தான் அல்லது இந்திய பிரிவினை – 4 தொகுதிகள் என மொத்தம் 17 தொகுதிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் துறை செயலாளர் ராஜாராமன், தமிழ் வளர்ச்சி துறை இயக்குநர் அருள், வீ.அரசு, அ.மதிவாணன் மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தைச் சேர்ந்த சோ.சண்முகநாதன், சிவக்குமார், மா. சிவக்குமார் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
தஞ்சாவூர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஓ.அ. எண். 13/2025-26/ தவஅ / நாள்.08.08.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, தஞ்சாவூர் வட்டம் அவர்களால், தஞ்சாவூர் (நெ), க(ம)ப, கோட்டத்தில் சி.ஆர்.ஐ.டி.பி.2025-26ன் கீழ் (TNJ-25) ஒரு பணி திட்டம் சாரா பணியின் கீழ் (TNJ-26) (TNJ-27) (TNJ-28) மூன்று பணிக்கு மற்றும் கும்பகோணம் (நெ), க(ம)ப, கோட்டத்தில் சி.ஆர்.ஐ.டி.பி.2025-26ன் கீழ் (TNJ-29) ஒரு பணி திட்டம் சாரா பணியின் கீழ் (TNJ-30) (TNJ-31) (TNJ-32) மூன்று பணிக்கு ஒரு உறை/ இரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **இணையவழியில் 03.09.2025, 11.30 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, (இணையவழி மூலம் மட்டுமே முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டும்) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **18.08.2025** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க&ப வட்டம், தஞ்சாவூர்**
செ.ம.தொ.இ/4364/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு - **நெடுஞ்சாலைத்துறை**
**நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 14 / 2025-26 / தவஅ, நாள்: 11.08.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், (நெ) க(ம)ப, சேலம் வட்டம் அவர்களால், சேலம், எடப்பாடி மற்றும் நாமக்கல் (நெ) க(ம)ப கோட்டங்களை சார்ந்த 2025-26 ஆண்டிற்கான மூன்று **சி.ஆர்.ஐ.டி.பி. பணிகளுக்கு (சிப்பம் 37 முதல் 39 வரை)** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **18.09.2025 - 10.30** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையளத்தில் **19.08.2025** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர்,**
**நெடுஞ்சாலை க(ம)ப வட்டம், சேலம்.**
**செ.ம.தொ.இ /4341/ ஒப்பந்தப்புள்ளி / 2025**

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
கோயம்புத்தூர் கட்டுமானம் (ம) பராமரிப்பு வட்டம்
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 12/2025-26 / தவஅ / நாள் 07.08.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, கோயம்புத்தூர் வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி - 2025-26 ல்** உள்ள **கோபிசெட்டிபாளையம் (நெ), க(ம)ப கோட்டம் - 1 பணி.** உதகமண்டலம் (நெ), க(ம)ப கோட்டம் - 1 பணிக்கு இணையவழியில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **11.09.2025 முற்பகல் 10.30 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **18.08.2025 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப, கோயம்புத்தூர் வட்டம்.**
**செ.ம.தொ.இ/4316/ஒப்பந்தப்புள்ளி/2025**

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.18/2025–2026/தவஅ/ நாள் 09.08.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால் சென்னை மாநகரச் சாலைகள் கோட்டம் – 1, சென்னை மாநகரச் சாலைகள் கோட்டம் – 2 மற்றும் திருவள்ளூர்(நெ) க(ம)ப கோட்டங்களைச் சார்ந்த **CRIDP 2025–2026** பணிகள் **இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **18/09/2025 முற்பகல் 11.00 மணி வரை** வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **20/08/2025** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப, சென்னை வட்டம்.**
**செ.ம.தொ.இ/4319/ஒப்பந்தப்புள்ளி/2025**

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை,**
சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.16/2025–2026/தவஅ/ நாள் 07.08.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால் சென்னை மாநகர சாலைகள் கோட்டம் – 1, சென்னை மாநகரச் சாலைகள் கோட்டம் –2 மற்றும் திருவள்ளூர்(நெ) க(ம)ப கோட்டங்களைச் சார்ந்த CRIDP 2025–2026 பணிகள் **இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 18/09/2025 **முற்பகல் 11.00 மணி** வரை வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 20/08/2025 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ),**
**க(ம)ப சென்னை வட்டம்.**
செ.ம.தொ.இ./4313/ஒப்பந்தப்புள்ளி/2025

# அதிமுகவில் இருந்து மேலும் பல தலைவர்கள் திமுகவுக்கு வருவார்கள்

### மைத்ரேயன் தகவல்

**சென்னை, ஆக. 14:** முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சந்தித்து, அதிமுகவில் இருந்து விலகி திமுகவில் இணைந்த மைத்ரேயன் நிருபர்களிடம் கூறியதாவது:

மண், மொழி, மானம் காக்க தற்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தை சிறப்பாக வழிநடத்திக் கொண்டு இருக்கிறார். களத்தில் தளபதி இருப்பதால், தமிழ்நாட்டு மக்கள் அவர் பின்னால் நிற்கிறார்கள். அதில் என்னையும் ஒரு சிப்பாயாக இணைத்துக்கொண்டு திமுகவில் இணைந்துள்ளேன். 2026 தேர்தலில் திமுக வெற்றி, நிச்சயிக்கப்பட்ட ஒன்று. தளபதி, கோட்டையில் நாளை தேசிய கொடி ஏற்றி வைக்கிறார். அடுத்த ஆண்டும் தளபதிதான் கொடியேற்றுவார். நடைபெறும் தேர்தலில் 2வது இடத்தில் யார் வருவார்கள் என்பதற்குத்தான் போட்டி.

அதிமுக போக்கு சரியானதாக இல்லை. அதிமுக பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி இருந்தாலும், பாஜ கூட்டணியில் அதிமுக இருக்கிறது என்று அறிவித்தது அமித்ஷா தான். கூட்டணி ஆட்சி என்கிறார்கள், குறைந்தபட்ச செயல் திட்டம் என்கிறார்கள். மொழி, இருமொழி, கல்வி கொள்கையில் குறைந்த பட்சமாக என்ன திட்டம் வைத்துள்ளனர் என்று அறிவிக்க வேண்டும். அதிமுக - பாஜ கூட்டணியினர் எந்த அடிப்படையில் இணைந்து செயல்படுவார்கள். இதனால் அதிமுக முன்னணி நிர்வாகிகள் மனகுழப்பத்தில் உள்ளனர். ஒரு சில நிர்வாகிகள் அதிமுக கட்சியை கையில் வைத்துக் கொண்டு செயல்படுகிறார்கள். அதிமுகவில் அமைப்பு செயலாளர் பதவி எனக்கு தந்தார்கள், என்னை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இன்னும் பல தலைவர்கள் அதிமுகவில் இருந்து திமுகவுக்கு வருவார்கள். தமிழ்நாட்டில் கூட்டணி அமைப்பது சகஜம்தான். திமுக கூட்டணியை தளபதிதான் முடிவு செய்வார். ஆனால் அதிமுகவில் முடிவு எடுக்கும் அதிகாரம் டெல்லியில் இருக்கிறது. ஒருவேளை ஆட்சிக்கு அதிமுக வந்தால், அதுவும் அத்தைக்கு மீசை முளைத்தால் தான் அது நடக்கும். அப்படி வரும்போது பாஜவின் தலையீடு எந்தளவுக்கு இருக்கும் என்பதை யோசிக்க வேண்டும்.

2026ம் ஆண்டு தேர்தல் தளபதி தலைமையில் 200 சீட்டை தாண்டி வெற்றி பெறும். இதில் எந்த சந்தேகமும் இல்லை. அதிமுகவில் ஒருமித்த கருத்து இல்லை, முன்னணி தலைவர்களை பயன்படுத்த தவறி விட்டார்கள். மண், மொழி, மானம் காக்க ஒரு அணியில் இணைவோம். நான் ஒரு இயக்கத்தில் சந்தோஷமாக இருந்தால் நிச்சயமாக மாற மாட்டேன். அதனால் அடுத்த இலக்கை நோக்கி செல்கிறேன். எடப்பாடி பழனிசாமி பொதுக்கூட்டத்துக்கு ஆட்களை கூட்டி வருகிறார்கள். அதை பார்த்து, தன்னை எம்ஜிஆர், ஜெயலலதா என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். உயர உயர பறந்தாலும் ஊர் குருவி பருந்தாகாது. இவ்வாறு அவர் கூறினார்.



**முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**
muthoot HOUSING FINANCE
பதிவு அலுவலகம்: TC எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம்-695 034,
கார்பரேட் அலுவலகம்: 12/A 01, 13ஆவது தளம், பரினீ கிரெஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051, மின்னஞ்சல் முகவரி: authorized.officer@muthoot.com

**கோரிக்கை அறிவிப்பு**
பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ்

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் ("எம்எச்எப்சிஎல்") அதிகாரப்பூர்வ அதிகாரி ஆவார் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி, பின்வரும் கடன்தாரர்(கள்), உப–கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர் உங்களுக்கு வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் மேலும் மாற்று பட்டுவாடாவாக மற்றும் வழியில் கீழேக் கொடுக்கப்பட்டவாறு அறிவிப்பு பிரசுரத்தின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நாளது தேதிய வட்டி, செலவு மற்றும் கட்டணங்கள் உட்பட முழு நிலுவைத்தொகையைச் செலுத்தி நிறுவனத்திற்குரிய தங்கள் முழு கடன் பொறுப்பைத் தீர்க்குமாறு கோருகிறார். கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கடனீடாக, பின்வரும் கடனீட்டுச் சொத்து(கள்) முறையே மேற்கூறிய கடன்தாரர்(கள்), உப–கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மூலம் எம்எச்எப்சிஎல் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | கடன்தாரர் /கள் பெயர் & கடன் கணக்கு எண் | செயல்படா சொத்து நாள் | கோரிக்கை அறிவிப்பு நாள் | மொத்த நிலுவைத்தொகை (ரூ) எதிர்கால வட்டி பொருந்தும் |
|---|---|---|---|---|
| 1 | கடன் கணக்கு எண். 11111106727<br>1. K.மோகன்பாபு, S/O கண்ணப்பன்<br>2. K.மோகன்பாபு, டிரைவர்<br>3. M.பூங்கோதை 4. M.பூங்கோதை, தையல் | 29 ஜூலை, 2025 | 01–ஆகஸ்ட்–2025 | 01–ஆகஸ்ட்–2025 தேதியன்று ரூ.1,04,452.01/– (ரூபாய் ஒரு லட்சத்து நான்காயிரத்து நானூற்று ஐம்பத்திரண்டு மற்றும் ஒரு பைசா மட்டும்) |
| | **கடனீட்டுச் சொத்து(கள்)/ அசையா சொத்து(கள்) விவரம்:** பொருள் எண். 1 : 1வது பொருள்: – நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் உள்ள நத்தம் பழைய பகுதி எண்.133/பகுதி, நத்தம் புதிய பகுதி எண்.206/7, பழைய கிராமம் எண்.99, புதிய எண்.90, வேடல் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகாவில் அமைந்துள்ளது, காஞ்சிபுரம் கூட்டு 4 துணைப் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், 311 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டது, எல்லைகள்: கிழக்கு: காலியிடம். மேற்கு: சிவாவின் வீடு. வடக்கு: சிமெண்ட் சாலை. தெற்கு: சாலை. எங்கே, 1675 சதுர அடி பரப்பளவு கொண்டது, வடக்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக: 10.8 மெட்ரிக் டன். தெற்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக: 10.6 மெட்ரிக் டன். கிழக்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக: 30 மெட்ரிக் டன். மேற்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக: 28.2 மெட்ரிக் டன். கிழக்கு: கண்ணப்பனின் மீதமுள்ள பகுதி. மேற்கு: சிவாவின் வீடு & காலியிடம். வடக்கு: சிமெண்ட் சாலை. தெற்கு: எல்லப்பன் & மலர்க்கொடி பகுதி. இங்கு, கிழக்கு முதல் மேற்கு வரை 25 அடி மற்றும் வடக்கே தெற்கு வரை 67 அடி அளவிடும் இந்தப் பகுதி மொத்தம் 1675 சதுர அடி, துணைப் பிரிவு S.No.206/7A இல் உள்ள மனைவாரி பட்டா எண்.285 இன் படி. | | | |

மேற்கூறிய கடன்தாரர், உப–கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) மேற்கூறியவாறு எம்எச்எப்சிஎல் பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், எம்எச்எப்சிஎல் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை சுவாதீனம் செய்யும் உரிமை பெறும். மேலும் முற்றிலும் கடன்தாரர்களின் முழு பொறுப்புகள், செலவு மற்றும் விளைவுகளில், சட்டத்தில் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறுமாறு இவ்வித பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
மேற்கூறிய கடன்தாரர்(கள்), உப–கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர் முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் முன்கூட்டிய ஒப்புதலின்றி அறிவிப்பில் குறிப்பிட்ட மேற்கூறிய கடனீட்டுச் சொத்தினை(களை) விற்பனை, குத்தகை அல்லது பிற வழியில் பெயர்மாற்றம் செய்வதற்கு சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13 இன் உட்பிரிவு (13) விதிமுறையின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இடம் : சென்னை,
நாள்: 14 ஆகஸ்ட், 2025
ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடுக்காக

**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்**
OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
**CIN No.U67100TZ2014PTC020363**
**கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028. மின்னஞ்சல்: Karthi.govindasamy@omkaraarc.com,**
**அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: + 91 93446 84194/+91 98840 62068/9962333307**

[பிற்சேர்க்கை – IV–A][விதி 8 (6) உ/ப 9(1) விதியைப் பார்க்கவும்]
**அசையாச் சொத்தின் மின்–ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

**பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு**
இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஓஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஓஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) எடெல்வீஸ் வீட்டுவசதி நிதி லிமிடெட் (உரிமையீந்தோர்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஓஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஓஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஓஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"**யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

| வ. எண் | கடன்தாரர்(கள்)/உப கடந்தாரர்/ ஜாமீன்தாரர்கள் / சர்ஃபாசிசட்டம் 13(2) இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி/ கையக சுவாதிகம் நாள் | சொத்தின் உரிமையாளர் | கடனீட்டுச் சொத்து விவரங்கள் | சொத்தின் தன்மை | 11.08.2025 தேதியின்படி நிலுவைத் தொகை | நிர்ணய விலை/ ஏலம் உயர்த்தும் தொகை | முன்வைப்புத் தொகை -நிர்ணய விலையில் 10% | சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| லாட் 1 | திரு. M.R.ராஜாராம் / திருமதி.ப்ரியா R மற்றும் M/s. அண்ணாமலை நெட்வொர்க்ஸ் அண்ட் டெலிசிஸ்டம்ஸ் 13(2) தேதி: 14.02.2020 கையக சுவாதீன நாள்: 30.09.2024 | திரு. M.R.ராஜாராம் | அட்டவணை A: டிடிசிபி அனுமதி எண்.179/2002 மற்றும் திட்ட அனுமதி எண்.45/2013 இன்படி உருவாக்கப்பட்ட, சர்வே எண்.82/2A மற்றும் 82/2B இல் உள்ள கார்த்திக் நகர் விரிவாக்கம் 1 இல் புதிய எண்.169, மாடம்பாக்கம் கிராமம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மனை எண்.25, பரப்பளவு 2222 ச.அடி உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலமும் கட்டிடமும் உள்ள சொத்து. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது. அதன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.24, தெற்கில்: மனை எண்.26, கிழக்கில்: காலி நிலம், மேற்கில்: 23 அடி லேஅவுட் சாலை, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்.63 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்.64 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்.35 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம். 35அடி. மொத்தப் பரப்பளவு 2222 சதுர அடி. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்து உள்ளது. அட்டவணை B: அட்டவணை A இல் உள்ள சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 294 ச.அடி உள்ள பிளாட் எண்.S–1, இரண்டாவது தளம், அட்டவணை A இல் குறிப்பிடப்பட்ட சொத்தில் உள்ள முகப்பு பகுதி 712 ச.அடி உள்ள சொத்து. | அடுக்குமாடி குடியிருப்பு | ரூ.46,82,493/– (ரூபாய் நாற்பத்தாறு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து நானூற்று தொன்னூற்று மூன்று மட்டும்) | ரூ.22,00,000/– (ரூபாய் இருபத்திரண்டு லட்சம் மட்டும்) ஏலம் உயர்வு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) | ரூ.2,20,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும் | அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| லாட் 2 | திரு. M.R.ராஜாராம் / திருமதி.ப்ரியா R மற்றும் M/s. அண்ணாமலை நெட்வொர்க்ஸ் அண்ட் டெலிசிஸ்டம்ஸ் 13(2) தேதி: 14.02.2020 கையக சுவாதீன நாள்: 09.10.2024 | திரு. M.R.ராஜாராம் | அட்டவணை A: டிடிசிபி அனுமதி எண்.179/2002 மற்றும் திட்ட அனுமதி எண்.45/2013 இன்படி உருவாக்கப்பட்ட, சர்வே எண்.82/2A மற்றும் 82/2B இல் உள்ள கார்த்திக் நகர் விரிவாக்கம் 1 இல் புதிய எண்.169, மாடம்பாக்கம் கிராமம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மனை எண்.25, பரப்பளவு 2222 ச.அடி உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலமும் கட்டிடமும் உள்ள சொத்து. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது. அதன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.24, தெற்கில்: மனை எண்.26, கிழக்கில்: காலி நிலம், மேற்கில்: 23 அடி லேஅவுட் சாலை, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்.63 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்.64 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்.35 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம். 35அடி. மொத்தப் பரப்பளவு 2222 சதுர அடி. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்து உள்ளது. அட்டவணை B: அட்டவணை A இல் உள்ள சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 315 ச.அடி உள்ள பிளாட் எண்.S–2, இரண்டாவது தளம், அட்டவணை A இல் குறிப்பிடப்பட்ட சொத்தில் உள்ள முகப்பு பகுதி 761 ச.அடி உள்ள சொத்து. | அடுக்குமாடி குடியிருப்பு | ரூ.47,91,536/– (ரூபாய் நாற்பத்தேழு லட்சத்து தொன்னூற்று ஓராயிரத்து ஐந்நூற்று முப்பத்தாறு மட்டும்) | ரூ.23,00,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சம் மட்டும்) ஏலம் உயர்வு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) | ரூ.2,30,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும் | அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. |

**கணக்கு எண்.344905000929, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 22/2020-21 ட்ரஸ்ட்,வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், கிளை: பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC Code: ICIC0003449**

| | |
|---|---|
| **மின்–ஏலம் நாள் & நேரம்** | LOT 1. 03 செப்டம்பர் 2025 (புதன் கிழமை) நண்பகல் 12.00 முதல் பகல் 1.00 வரை.<br>LOT 2. 03 செப்டம்பர் 2025 (புதன் கிழமை) நண்பகல் 12.00 முதல் பகல் 1.00 வரை. |
| **ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்** | 01 செப்டம்பர் 2025 பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக |

**ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஓஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு**

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 12.08.2025 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

( கார்த்தி கோவிந்தசாமி)கைபேசி எண். 9344684194
நாள்: 14.08.2025
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அதிகாரி,ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)